# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,590 — 1958 නොවැම්බර් 21 වැනි සිකුරාදා — 21.11.1958

11,590 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II —சட்ட சம்பந்தமானது

## சுப்பிறீங்கோட் கிறிமினெல் வழக்கு விசாரணைகள்பற்றிய அறிவித்தல்கள்

### பிரசித்த பத்திரம்

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : மத்திய பகுதி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கண்டி டிஸ்திறிக்கைச் சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1958 ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 1 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஏ. பீ. எஸ். என். புள்ளநாயகம்,
மத்தியமாகாண பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர், கண்டி,
1958 ம் ஹு நவம்பர் மீ 13 ந் உ.

---

### பிரசித்த பத்திரம்

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : குருநாகல் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் : மத்திய வட்டாரத்தைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 1 ந் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்
டீ. சீ. எல். அமரசிங்ஹ,
வடமத்திய மாகாண பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர், அனுராதபுரம்,
1958 ம் ஹு கார்த்திகைமீ 12 ந் உ.

---

### பிரகடனம்

இலங்கைத் துவீபத்தின் கௌரவ உயர்தர நீதிமன்றம் மத்திய சுட்டுப்பிரயாணத்தைச் சேர்ந்த கிறிமினல் வழக்கு விசாரணை குருநாக்களில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.

மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமுகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர்.

ஏ. எல். பெரேரா,
வ. மே. மா. பிசுக்கால்.

பிசுக்கால் கந்தோர்,
குருணக்கல்
1958 ம் ஹு நொவம்பர் மீ 14 ந் உ.

---

### பிரகடனம்

இலங்கைத் துவீபத்தின் கௌரவ உயர்தர நீதிமன்றம் மத்திய மாகாணத்துக்கென நடாத்தும் கிறிமினல் வழக்கு விசாரணை கண்டியில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி காலே 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.

மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமுகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர்.

பீ. பி. வீ. ஏ. ஜே. பி. சேனரத்ன,
பிசுக்கால், ஊவா.

பிசுக்கால் கந்தோர், பதுளை.

---

### விளம்பரம்

1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 25 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 28 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் 24 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப் படுகின்றது.

பேர்ணாட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
1958 ம் ஹு கார்த்திகை (நவம்பர்) மீ 11 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.